**கலவான பிரதேச சபையி - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலவான பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கலவான பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனஙகாணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,821,876 தொகைக்கான அபிவிருத்தி செயற்திட்டங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2024 ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீதியினுள் ரூபா 12,835,000 தொகைக்கான மோட்டார் வாகனங்கள் உட்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டின் படி சபை கட்டிடத்தின் பெறுமதியை விட ரூபா 27,471,000 தொகை குறைவான பெறுமதி | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | சபைக்கு சொந்தமான அளவினை இனங்காண முடியாத 65 காணிகள் மற்றும் அவற்றில் அமைந்துள்ள கட்டிடங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டிற்கான கடையறை வாடகை வருமானம் ரூபா 170,200 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | திறந்தவெளி கடையறைகளுக்கான நிலுவை வாடகை ரூபா 224,395 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | நிதி நிலைமைக் கூற்றின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உரிமை மீதி மற்றும் தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் தொடர்பான கூற்றின் படி அத் திகதியில் உள்ளவாறு அந்த மீதி இடையே ரூபா 100,000 வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | நிதிக்கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 09 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் படி அத்திகதியில் உள்ளவாறு மீதிகள் இடையே ரூபா 17,023,067 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் துணைப் பதிவேடுகளை சரிசெய்து நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பேன். | வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 177(1) இற்கு முரணாக, 2023 செப்தெம்பர் மாதத்தில் வருமான உத்தியோகத்தர்களினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 317,204 தொகையினை அனுப்புவதற்கு 2024 ஜனவரி வரை தாமதப்படுத்தப்பட்டு இருந்தது. | முழுத் தொகையும் அறவீடு செய்யப்பட்டது. உத்தியோகத்தர் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | காலநீடிப்பு பெற்றிருக்காத 37 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,358,684 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,106,350 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கடந்த பல வருட காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 47,340 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகளை இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக தீர்க்கப்பட வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையி டப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்க ப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையி டப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்க ப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,463,645 | 3,570,625 | 3,268,829 | 3,643,614 | 4,192,877 | 3,289,245 | 2,930,594 | 3,633,626 |
| வாடகை | 8,232,800 | 8,271,682 | 6,831,959 | 14,205,431 | 9,941,213 | 10,369,796 | 8,169,855 | 12,593,822 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,011,500 | 1,089,635 | 1,089,635 | - | 1,541,790 | 7,731,571 | 7,731,571 | - |
| ஏனைய வரு மானங்கள் | 3,875,400 | 4,546,226 | 4,534,314 | - | 3,064,607 | 3,956,448 | 3,956,448 | - |
| | 16,583,345 | 17,478,168 | 15,724,737 | 17,849,045 | 18,740,487 | 25,374,060 | 22,788,468 | 16,227,448 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 1,652,455 தொகைக்கான நிலுவை வீதவரி மீதியில் 5 வருடங்களை விட பழமையான ரூபா 878,621 இற்கான மீதியொன்றும் காணப்பட்டது. | இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் காணப்படும் வீதவரி ஆதனங்களுக்காக சட்டத்தின் படி நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 615,761 இற்கான நிலுவை ஏக்கர் வரி மீதியொன்றில் 3 வருடங்களை விட பழமையான ரூபா 599,828 இற்கான மீதியொன்றும் காணப்பட்டது. | நிலுவை ஏக்கர் வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |
| (இ) | இறைச்சி மற்றும் மீன் விற்பனை நிலையங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 464,947 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | அத் தொகையினை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| (ஈ) | 34 நிறுவனங்களுக்கு சொந்தமான 72 அறிவித்தல் பலகைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா | நிறுவனங்களுக்கு அறிவுறுத்தும் கடிதங்கள் தற்போது அனுப்பப்பட்டுள்ளன. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 673,150 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (உ) | 5 முச்சக்கர வண்டி சங்கங்களுக்கு சொந்தமான 133 முச்சக்கர வண்டிகளிலிருந்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கட்டணம் ரூபா 319,000 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள செயற்படாத அங்கத்தவர்கள் அகற்றப்பட்டனர். இது வரை காணப்பட்ட நிலுவைத் தொகையில் ரூபா 56,400 தொகை அறவீடு செய்யப்பட்டது. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முககாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது 1080 மெற்றிக் தொன் கழிவுப் பொருட்கள் முறையான மற்றும் சுற்றாடல் நேய செய்முறை ஒன்றின்றி அகற்றப்பட்டு இருந்தது. அதே போல் 2022 ஆகஸ்ட் மாதம் கிடைத்திருந்த ரூபா 950,000 தொகைக்கான பெலர் இயந்திரம் 2024 ஜனவரி வரை விளைவற்றுக் காணப்பட்டது. | குப்பைகளை வகைப்படுத்தும் நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு பெலர் இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். | முறையான குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் பதில் கடமையாற்றும் செயலாளருக்கு 2023 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதிக்காக பதில் கடமைக் கொடுப்பனவாக ரூபா 114,345 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பதில் கடமைக்காக சபைக்கு வருகை தந்த நாட்களுக்காக ரூபா 60,500 இற்கான இணைந்த படியும் செலுத்தப்பட்டிருந்தது. | பதில் கடமைக் கொடுப்னவு பெற்றுக் கொள்ளல், இணைந்த செலவு அல்லது பிரயாணச் செலவு பெற்றுக் கொள்வதில் தடையேதும் காணப்படவில்லை. | பதில் கடமை கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த கடமைக்காக இணைந்த படி செலுத்தப்படக் கூடாது. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பஹலகந்த, பாலிந்தகொட 160 பர்சஸ்களுக்கான மயானத்தில் 124 பர்சஸ்கள் அங்கீகாரம் இன்றியவர்களினால் 1997 ஆண்டு முதல் தனதாக்கியிருந்த போதிலும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை ஏதும் இதுவரை எடுத்திருக்கவில்லை. | சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன் அதன் படி நடவடிக்கை எடுப்பேன். | அங்கீகாரமின்றி இருப்பவர்களை அகற்றுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.4.2 இற்கு முரணனாக 3 மாதங்களுக்கு குறைவான நிர்மாண வேலைகளுக்காக விலைமுரண் என ரூபா 75,738 தொகை செலத்தப்பட்டிருந்தது. 2022 ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த, அந்த தொட்டிக்கு நுழைவதற்காக குகுலேகம நீர்மின்சக்தி நிலையத்தினால் அங்கீகாரம் வழங்கியிருக்காமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 902,100 தொகை பயனற்ற செலவொன்றாகி இருந்ததுடன் மலக் கழிவுகளை அகற்றுவதில் சிக்கலும் தீர்ந்திருக்கவில்லை. | மிகைக் கொடுப்பனவு குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். 2024 ஏப்ரல் முதல் சாக்கடை கிடங்குகளில் சாக்கடைகளை அகற்றுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மிகைக் கொடுப்பனவை திருப்பி அறவீடு செய்வதற்கு மற்றும் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ) | கனேகல புவக்பெலகெடிஹேன பாதையை அபிவிருத்தி செய்யும் போது ரூபா 15,543 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்ட தொகையை திருப்பி அறவீடு செய்வேன். | மிகைக் கொடுப்பனவு திருப்பி அறவீடு செய்யப்பட வேண்டும். |

3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திருத்த வேலை மேற்கொள்ளக் கூடிய 05 டிரக்டர்கள் 06 மாதங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | ஏற்பாடுகள் கிடைத்த பின்னர் திருத்த வேலை மேற்கொள்வேன். | சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கக் கூடாது. |